**2024 யூன்**

# இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) தயாரிப்பு மற்றும் பணிகள்

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2024 யூனில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் ஆகிய இரண்டிலும் விரிவடைதல்களை எடுத்துக்காட்டுகின்றன**

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2024 யூனில் 56.6 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, தயாரிப்பு நடவடிக்கைகளில் விரிவாக்கமொன்றை எடுத்துக்காட்டியது.** தொழில்நிலை தவிர அனைத்து துணைச் சுட்டெண்களும் மாத காலப்பகுதியில் நடுநிலையான அடிப்படை அளவிற்கு மேல் காணப்பட்டன.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பவற்றில் விரிவடைதலுக்கு உணவு மற்றும் குடிபான துறையின் தயாரிப்பில் வளர்ச்சி பிரதான காரணமாக அமைந்தது. புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பவற்றில் அதிகரிப்பிற்கு இசைவாக கொள்வனவுகளின் இருப்பும் விரிவடைந்தது. எனினும், வெற்றிடமான பதவிகளை மீள்நிரப்புவது பற்றி நிறுவனங்கள் இன்னும் எச்சரிக்கையுடன் காணப்படுவதால் தொழில்நிலை மாதகாலப்பகுதியில் சுருக்கமடைந்து காணப்பட்டது. அதேவேளை, பிரதானமாக முக்கிய கப்பற் துறைமுகங்களில் நெருக்கடி காரணமாக நிரம்பலர் விநியோக நேரம் யூனில் மேலும் நீட்சியடைந்தது.

***கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு***

| மாறி | மே. | யூன் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | 58.2 | 56.6 | - | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 57.5 | 57.1 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 62.5 | 58.2 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 49.0 | 48.5 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 60.8 | 56.1 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 62.8 | 63.9 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

பொருளாதார நிலைமைகளில் படிப்படியான மீட்சியினை எதிர்பார்த்து அடுத்து வருகின்ற மூன்று மாதங்களுக்கான தொழிற்துறை எதிர்பார்க்கைகள் மேம்பாட்டினை எடுத்துக்காட்டுகின்றன.

**தயாரிப்பு கொ.மு.சு 56.6**

**2024 யூன்**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு:**

**கொமுசு தயாரிப்புத் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| **உலகம்** | மேம்பட்டுள்ளது, மெதுவான வீதத்தில் |
| **இந்தியா** | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| **சீனா** | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| **ஐக்கிய அமெரிக்கா** | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| **ஐக்கிய இராச்சியம்** | மேம்பட்டுள்ளது, மெதுவான வீதத்தில் |
| **யூரோ வலயம்** | சீர்குலைந்துள்ளது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2024 யூலை 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் (கொ.மு.சு – பணிகள்), 63.5 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்த வியாபார நடவடிக்கைச் சுட்டெண் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு 2024 யூனில் பணிகள் நடவடிக்கைகளில் மேலும் விரிவடைதலை எடுத்துக்காட்டியது.**

அநேகமான துறைகளுக்கிடையில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகள் மூலம் வியாபார நடவடிக்கைகளில் விரிவடைதல் தூண்டப்பட்டிருந்தது. ஹஜ் பண்டிகைப் பருவகாலத்தின் காரணமாக மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் என்பவற்றில் வியாபார நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்தன. மேலும், போக்குவரத்துப் பணிகள், நிதியியல் பணிகள் அத்துடன் ஏனைய தனிப்பட்ட பணிகள் என்பவற்றில் வியாபார நடவடிக்கைகளும் மாதகாலப்பகுதியில் கணிசமான வளர்ச்சியினை அனுபவித்தன. எனினும், சுற்றுலாப் பயணிகளுக்கான பருவகாலம் தாண்டிய காலப்பகுதியில் மந்தமான வருகைகளுக்கு இசைவாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபான பணிகளில் தொழில் நடவடிக்கைகள் முன்னைய மாதத்தில் இருந்ததைப் போன்ற அதே மட்டத்தில் காணப்பட்டன.

புதிய வியாபாரங்கள், குறிப்பாக நிதியியல் பணிகளில் மற்றும் ஏனைய தனிப்பட்ட பணி நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புகள் மூலம் யூனில் அதிகரித்தன.

பல கம்பனிகளாலும் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆட்சேர்ப்புக்கள் காரணமாக தொழில்நிலை யூனில் அதிகரித்தது. அதேவேளை, நிலுவையிலுள்ள பணிகள் மாத காலப்பகுதியில் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தன.

***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***


| மாறி | மே. | யூன் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **55.0** | **63.5** | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| புதிய வியாபாரங்கள் | 52.0 | 60.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 52.0 | 56.6 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 45.7 | 48.4 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 70.2 | 73.2 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மூலம் துணையளிக்கப்பட்டு, அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் உயர்வான வீதத்தில் தொடர்ந்தும் மேம்பட்டன.

**பணிகள்**
**கொ.மு.சு**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**2024 யூன்**
**63.5**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | மேம்பட்டுள்ளது, மெதுவான வீதத்தில் |
| இந்தியா | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| சீனா | மேம்பட்டுள்ளது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | மேம்பட்டுள்ளது, மெதுவான வீதத்தில் |
| யூரோ வலயம் | மேம்பட்டுள்ளது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[i], 2024 யூலை 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.

பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.